


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.12.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியின் சார்பில் 9.12.2025 முதல் 14.12.2025 வரை சென்னையில் நடைபெற்ற SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, அபே சிங், அனஹத் சிங், வேலவன் செந்தில்குமார், ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் இயக்குநர் சைரஸ் போன்சா மற்றும் பயிற்றுநர்கள் ஹரிந்தர் பால் சிங், ஆலன் சோய்சா ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.12.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, 3வது CII Sports Business Awards 2025இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான (THE BEST STATE PROMOTING SPORTS DEVELOPMENT AWARD) விருதை காண்பித்து, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### புனித ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு உதவும் வகையில்

# சென்னையில் ரூ.39.20 கோடியில் தமிழ்நாடு ஹஜ் இல்லம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்!

**சென்னை, டிச. 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் அரசு சார்பில் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய மக்களுக்கு உதவும் வகையில் கட்டும் தமிழ்நாடு ஹஜ் இல்லத்திற்கு சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் இன்று (16.12.2025-செவ்வாய்க் கிழமை) காலை 10 மணி அளவில் அடிக்கல் நாட்டுகிறார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை நோக்கம் எல்லார்க்கும் எல்லாம் என்பதே ஆகும். அரசு நிறைவேற்றும் திட்டங்கள் அனைத்தும் சமத்துவத்தை நிலைநாட்டும் வகையில் செயல்படுத்தி வருவது இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் வாழும் அனைவரையும் போல் சிறுபான்மையின மக்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து வருகிறார்கள். இஸ்லாமிய சமுதாய மக்கள் ஹஜ் பயணம் மேற்கொள்வதை அவர்களின் வாழ்நாள் கடமைகளில் முக்கியமானதாகக் கருதுகிறார்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஹஜ் பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் சென்னை வரும் இஸ்லாமியர்கள் பயணம் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாகச் சென்னை வந்து தங்கி சென்னை விமான நிலையம் வழியாக ஹஜ் பயணம் செல்வதற்கு வசதியாக விமான நிலையத்திற்கு அருகில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும் என 2.3.2025 அன்று அறிவித்திருந்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் அரசு நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாள் ஒன்றிற்கு ஏறத்தாழ 400 ஹஜ் புனித பயணிகள் தங்குவதற்கு ஏற்ப தமிழ்நாடு ஹஜ் இல்லக் கட்டடம் கட்டுவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (16.12.2025) காலை 10 மணி அளவில் அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், சீர்மிகு பெரு மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### வானுயரத்தில் தமிழ்நாட்டின் ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சி விகிதம் உள்ளது!

# 2031க்குள் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம் என்ற நிலை உருவாக்கப்படும்!

## முதல்வரின் கருத்துக்கு – ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!


தினகரன்
டிசம்பர் 15, 2025 திங்கட்கிழமை
வானுயர் வளர்ச்சி
பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பெரிய மாநிலங்களை எல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டு சாதனை படைத்து வருகிறது. இந்தியாவில் எதற்கெடுத்தாலும் ரோல்மாடல் மாநிலங்களாக ஒன்றிய அரசால் சுட்டிக்காட்டப்படும் மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களை பின்னுக்கு தள்ளிவிட்டு, தமிழகம் 16 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் நாட்டின் மிக வேகமாக வளரும் மாநிலமாக இருப்பதாக ரிசர்வ் வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. தமிழகத்தில் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மூலம் தனி நபர் வருமானம் அதிகரித்துள்ளது. இது ஒட்டுமொத்த தமிழக வளர்ச்சியையும் ஜெட் வேகத்தில் முன்னேற்றி வருகிறது.

சென்னை, டிச. 16–

பெரு மாநிலங்களை பின்னுக்கு தள்ளி தமிழ்நாடு ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சி வானுயரத்தில் உள்ளது. 2031க்குள் அனைத்துத் துறைகளி லும் தமிழ்நாடு முதலிடம் என்ற நிலை உருவாக்கப்படும் என்ற முதல்வரின் கருத்துக்கு தினகரன் நாளேடு தலையங்கம் வரவேற்றுள்ளது.

இது குறித்து 15.12.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பெரிய மாநிலங்களை எல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டு சாதனை படைத்து வருகிறது. இந்தியாவில் எதற்கெடுத்தாலும் ரோல்மாடல் மாநிலங்களாக ஒன்றிய அரசால் சுட்டிக்காட்டப்படும் மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களை பின்னுக்கு தள்ளிவிட்டு, தமிழகம் 16 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் நாட்டின் மிக வேகமாக வளரும் மாநிலமாக இருப்பதாக ரிசர்வ் வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. தமிழகத்தில் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மூலம் தனி நபர் வருமானம் அதிகரித்துள்ளது. இது ஒட்டு மொத்த தமிழக வளர்ச்சியையும் ஜெட் வேகத்தில் முன்னேற்றி வருகிறது.

புதிய தொழில்களை ஈர்ப்பதிலும், ஏற்றுமதியை அதிகரிப்பதிலும், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இளைஞர்களை ஊக்குவிப்பதிலும் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக தமிழகம் திகழ்கிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமை தொகை ஆகிய சமூக நலத்திட்டங்களை கண்டு இன்று மற்ற மாநிலங்கள் வியக்கின்றன. பெண் கல்வியை உயர்த்தும் புதுமைப்பெண் திட்டம், பணியாற்றும் பெண்களுக்கு தோழி விடுதிகள், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு என மகளிருக்கான திட்டங்கள் பெண்களை பிரகாசிக்க வைத்தன.

தமிழகத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் இன்று தமிழகத்திற்கு கிரீடங்களாக திகழ்கின்றன. கடந்த 2023–2024ம் ஆண்டில் தமிழ்நாட்டின் மாநில உள்நாட்டு உற்பத்தி (ஜிஎஸ்டிபி) ரூ.26.88 லட்சம் கோடியாக இருந்தது. இது 2024–2025ம் ஆண்டில் ரூ.31.19 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 2021–2022 நிதியாண்டில் ரூ.20 லட்சத்து 72 ஆயிரம் கோடியாக இருந்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, தற்போது ரூ.31.19 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இதன்மூலம் 15.98 சதவீத வளர்ச்சியை தமிழகம் பதிவு செய்துள்ளது.

கர்நாடகாவின் உள்நாட்டு உற்பத்தி பொருளாதார வளர்ச்சி 12.77 சதவீதமாகவும், இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் மகாராஷ்டிரா உள்நாட்டு உற்பத்தி 11.70 சதவீதமாகவும், குஜராத்தின் உள்நாட்டு உற்பத்தி 12.69 சதவீதமாகவும் தற்போது உள்ளது. இவற்றை ஒப்பிடுகையில் தமிழகம் 15.98 சதவீத உள்நாட்டு உற்பத்தியோடு முன்னிற்கிறது. மாநில உள்நாட்டு உற்பத்தியிலும், தனி நபர் வருமானத்திலும் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் உள்ளிட்ட மாநிலங்களை தமிழ்நாடு பின்னுக்குத் தள்ளியிருப்பது பொருளாதார நிபுணர்களை வியப்படைய வைக்கிறது.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களான மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், காலை சிற்றுண்டி திட்டங்கள் வேறு எந்த மாநிலமும் கண்டிராத திட்டங்களாகும்.

விளையாட்டுத்துறையை பொறுத்தவரை செஸ் ஒலிம்பியாட் போட்டிகள், ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ், பார்முலா 4 கார் பந்தயம் என உலகளாவிய போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்டது தமிழகத்திற்கே பெருமை சேர்த்தது. தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்திய பெருமையும் திராவிட மாடல் அரசுக்கு உண்டு.

அந்தவகையில் பெரு மாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு வானுயரத்தில் தமிழக ஜிஎஸ்டிபி வளர்ச்சி விகிதம் உள்ளது. வரும் 2031ம் ஆண்டு திராவிட மாடல் 2.0 நிறைவுறும்போது, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் இல்லாத துறையே இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என முதல்வர் முத்தாய்ப்பாக கூறுவது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**D.T.P. ஆப்பரேட்டர்கள் -- போட்டோஷாப் மற்றும் பிழை திருத்துனர்கள் தேவை !**

முரசொலி கணினிப் பிரிவில் பணிபுரிய ‘போட்டோஷாப்’ (LAYOUT) பணியில் நன்கு தேர்ச்சி பெற்ற D.T.P. ஆப்பரேட்டர்கள் மற்றும் முன் அனுபவம் மிக்க பிழை திருத்துநர்கள் (PROOF READERS) பகல் மற்றும் இரவுப் பணிகளுக்கு (ஆண்கள், பெண்கள்) தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :–
பொது மேலாளர்
‘முரசொலி’ – நாளிதழ்
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.

### தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

# மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கே.கவிதா தேவி மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.ராம லெட்சுமி முன்னிலையில் இன்று (16.12.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 11.30 மணி அளவில், கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1) தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பிறந்தநாள் விழா.

2) வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு

3) கழக வளர்ச்சிப் பணி


**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.



விக்கிரவாண்டி, வி.சாலை ஊராட்சியில் 5000 மெட்ரிக்டன் கொள்ளளவுடன் அமைக்கப்படவுள்ள ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்களை தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக்கழகம் சார்பில் அமையவுள்ளது. அதன் துவக்க நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் ஜெயச்சந்திரன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் சங்கீதாஅரசி, பேரூராட்சி தலைவர் அப்துல்சலாம், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஜீவிதா, ஒன்றியக் கழகச் செயலாளர் ஜெயபால், வேம்பி ரவி,கவுன்சிலர் சாவித்ரி,ஊராட்சி மன்ற தலைவர் கவியரசு, இளைஞரணி பாலகிருஷ்ணன், சங்கர், தொகுதி ஒருங்கிணைப்பாளர் சுந்தர், சுதாகர், அசோக்குமார்,கிருஷ்ணன், அரிகிருஷ்ணன், கங்காதரன், கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி நாகசுந்தரம்
### டிசம்பர் 16 (2003)



தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – திருச்சி மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் – தென் இந்திய நலவுரிமைச் சங்க உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

திருச்சி நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றியவர்.

தேவிகுளம்–பீர்மேடு; மும்முனை, இந்தி எதிர்ப்பு, விலைவாசி ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது மிசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

“கட்சிக்காக என்ன செய்தேன் என்று கேட்கின்றவர்களுடைய பட்டியலில் உள்ளவர் என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**